Deposition of Witness Page.No.

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE KATPADI

Case No MC.12/2021

Deposition of Witness for PW1

Name : கோமதி

Husband's Name :குமரேசன்

Village : புதூர் மேடு

Occupation : இல்லதரசி

Age : 26

Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w rule 35,36 of Criminal rules of practice 2019. 19.04.2023

---

<u>சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.</u>

<u>முதல் விசாரணை:</u>

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு முதன்மை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எதிர் மனுதாரருடன் நடைபெற்ற திருமணத்தின் அழைப்பிதழ் **ம.சா.ஆ.1** ஆகவும், எனக்கும் எதிர்மனுதாருக்கும் திருமணத்தின் பலனாக பிறந்த குழந்தை தீர்ஷசணா வின் பிறப்பு சான்றிதழனின் ஒப்பிடப்பட்ட நகல் **ம.சா.ஆ. 2 ஆகவும்,** 04.09.2018 தேதியிட்ட மனு எண் 190/2018 **ம.சா.ஆ. 3 ஆகவும்,** 24.12.2018 அன்று நடந்த சம்பவம் தொடர்பாக பனமடங்கி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்ததற்கான ரசீது எண் 130/2018 நகல் **ம.சா.ஆ. 4 ஆகவும்,** 17.05.2019 அன்று நடந்த சம்பவம் தொடர்பாக லத்தேரி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்ததற்கான ரசீது எண் 81/2019 நகல் **ம.சா.ஆ. 5 ஆகவும்,** வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் 26.08.2019 ஆம் தேதி கொடுத்த புகார் மனுவிற்கான ரசீது எண் APPLICATION.NO.25/SPG/SB/2019 நகல் **ம.சா.ஆ. 6 ஆகவும்,** 27.11.2019 தேதி எதிர்மனுதாருடைய உயர் அதிகாரிகளுக்கு எங்களது திருமணத்தினை எதிர்மனுதாருடைய அலுவலகப் பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மனு நகல் **ம.சா.ஆ. 7** ஆகவும், உயர் அதிகாரிகளுக்கு 27.12.2019 அன்று கொடுத்த புகார் மனு நகல் **ம.சா.ஆ. 8** ஆகவும், 07.02.2020 அன்று இருதரப்பினரையும் சமூக நல அலுவலகத்தில் ஆஜராகுமாறு வழங்கப்பட்ட அழைப்பாணை நகல் **ம.சா.ஆ. 9** ஆகவும், 16.09.2020 அன்று நடைபெற்ற

தகராறு காரணமாக பணமடங்கி காவல் நிலையத்தில் அளித்த புகார் மனுவிற்காக வழங்கப்பட்ட ரசீது எண் 196/2020 நகல் **ம.சா.ஆ. 10** ஆகவும், 02.01.2021 அன்று எதிர்மனுதாரருடைய உயர் அதிகாரிகளுக்கு கொடுத்த புகார் மனு நகல் **ம.சா.ஆ. 11** ஆகவும், 29.01.2021 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் மனு நகல் **ம.சா.ஆ. 12** ஆகவும், 08.03.2021 அன்று இரண்டாம் மனுதாரரின் பெயரையும் எதிர்மனுதாரர் பணி பதிவேடுகளில் பதிவு செய்ய மனு நகல் **ம.சா.ஆ. 13** ஆகவும், 15.04.2021 அன்று எதிர்மனுதாரரின் வரதட்சனை கொடுமை சம்மந்தமாக உயர் அதிகாரிகளுக்கு அளித்த மனு நகல் **ம.சா.ஆ. 14** ஆகவும், எதிர்மனுதாரரின் 16.04.2021 வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **ம.சா.ஆ. 15** ஆகவும், 27.04.2021 தேதியிட்ட எனது வழக்கறிஞர் பதில் சட்ட அறிவிப்பு நகல் **ம.சா.ஆ. 16** ஆகவும், எனது ஆதார் அட்டையின் அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **ம.சா.ஆ. 17** ஆகவும், இரண்டாம் மனுதாரரின் தடுப்பூசி அட்டவணை நகல் **ம.சா.ஆ. 18** ஆகவும், எதிர்மனுதாருக்கும் எனக்கும் நடந்த திருமண புகைப்படம் **ம.சா.ஆ. 19** ஆகவும், இரண்டாம் மனுதாரரின் புகைப்படம் **ம.சா.ஆ. 20 ஆகவும்,** குறியீடு செய்யப்படுகிறது. மனுபடி உத்தரவாக வேண்டிக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை: இல்லை.

J JAYGANESH
Digitally signed by J JAYGANESH
Date: 2023.04.21 15:09:41 +0530